Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/28/2021**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

நமது மறைமாவட்டம் "ஆழத்தில் வலை போடுங்கள்" (லூக். 5: 4) என்னும் இறைவார்த்தையை மையச் சிந்தனையாகக் கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கான திட்டம் தீட்டி மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக கடந்த ஆண்டினுடைய ஒருசில காரியங்களை நம்மால் செய்ய இயலவில்லை. ஆனாலும் 2021-ஆம் ஆண்டில் மிக முக்கியமான நிகழ்வுகளை முன்னெடுத்து செய்வதற்காக மறைமாவட்டம் தீர்மானித்துள்ளது. "ஆழத்தில் வலை போடுங்கள்" என்னும் மையக்கருத்து, இரு வேறு காரியங்களுக்காக நாம் உறுதியேற்றிட அழைப்பு விடுக்கிறது. முதலாவது இறைநம்பிக்கையில் ஆழப்படுதல், இரண்டாவது கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரின் நற்செய்தியை எடுத்துரைத்தல். நாம் ஆண்டவருடைய வார்த்தைகளைக் கேட்டு அதில் நம்பிக்கை கொண்டுச் செயல்படும் போது வாழ்வின் எந்தச் சூழலையும் நம்மால் எதிர்கொள்ள முடியும் என்பதை இயேசு புனித லூக்கா எழுதிய நற்செய்தி 6-ம் அதிகாரம் 46 முதல் 49 வரையுள்ள இறை வார்த்தைகளில் தெளிவு படுத்துகிறார். "அவர் ஆழமாய் தோண்டி, பாறையின் மீது அடித்தளம் அமைத்து, வீடு கட்டிய ஒருவருக்கு ஒப்பாவார்". வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்து அந்த வீட்டின் மேல் மோதியும் அதை அசைக்க முடியவில்லை. ஏனென்றால் அது நன்றாக கட்டப்பட்டிருந்தது. நான் சொல்வதைக் கேட்டும் அதன்படி செயல்படாதவரோ அடித்தளமில்லாமல் மண்ணின் மீது வீடு கட்டியவருக்கு ஒப்பாவர். ஆறு பெருக்கெடுத்து அதன் மேல் மோதிய உடனே அது விழுந்தது. அவ்வீட்டிற்கு

பேரழிவு உண்டாயிற்று''. இக்காலச் சூழலில் ஏராளமான மக்கள் இறை நம்பிக்கையில் ஆழப்படாமல் வாழ்வில் சோர்வடைந்து எதிர்நோக்கில்லாமல் வாழ்வதை நம்மால் கண்டு கொள்ள முடியும். ஆனால் வாழ்விற்கான வளங்களை தரவல்லவர் 'வார்த்தை மனுவுருவான இயேசு' என்பதை பேதுரு வாழ்விழந்த மக்களுக்கு எடுத்து சொல்கிறார். "ஆண்டரே நாங்கள் யாரிடம் போவோம், நிலைவாழ்வளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன". (யோவா. 6: 68)

நமக்கு வாழ்வளிக்க வல்ல இறைவார்த்தைகளில் பற்றுகொண்டு இறை நம்பிக்கையில் ஆழப்பட துணைப்புரியுமாறு மறைமாவட்டம் வழியாக இந்த வெள்ளிவிழா ஆண்டில் இறைவன் நமக்கு ஒரு வாய்ப்பினைத் தருகிறார். அதுவே வின்செந்திய அருட்தந்தையர்களால் நடத்தப்படுகின்ற "பாப்புலர் மிஷன் தியானம்". புனித வின்சென்-தே-பவுல் நிறுவிய வின்செந்திய சபை, கேரளா சாலக்குடி டிவைன் தியான இல்லம் வழியாக, மக்களை ஆன்மீகத்தில் ஆழப்படுத்தி கிறிஸ்துவை மக்கள் அதிகமாக அறிந்து கொண்டு மீட்பைக் கண்டடைவதற்காக மிகச் சிறப்பான காரியங்களை செய்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. தற்போது அச்சபை குருக்கள் உலகின் பல நாடுகளின் பல பங்குகளில் குழுக்களாக இந்த பாப்புலர் மிஷன் தியானம் நடத்தி கிறிஸ்துவை மக்கள் அனுபவிக்க செய்வதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இக்குழு நமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலிலும் வெள்ளிவிழாவோடு சேர்த்து இந்த தியானத்தை நடத்துகிறது. வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை முடிவடையும் இந்த தியானத்தில் ஜெப ஊர்வலம், வீடு சந்திப்பு, உடல் உள்ள நோயிலிருந்து விடுதலை அளிக்கும் வழிபாடு, வெற்றிப்பவனி ஆகியன நடைபெறும்.

"பாப்புலர் மிஷன் தியானம்" தொடங்குவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் வின்செந்திய அருட்தந்தையர்கள் நமது பங்குகளில் வந்து பொதுக் கூட்டம் நடத்தி தியான மையங்களையும், பொறுப்பாளர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். இத்தியானம் மற்றும் தயாரிப்பு முறைகள் குறித்து ஏற்கனவே நமது பங்கு தந்தையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைக் குறித்த அதிக விவரங்களை வின்செந்திய அருட்தந்தையர்கள் நமது பங்குகளுக்கு வரும்போது எடுத்துரைப்பார்கள். மன அமைதி வேண்டி பல தியான இல்லங்களுக்கு மக்கள் குவிந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பாப்புலர் மிஷன் தியானம் நமது பங்குகளில் உள்ள

இல்லங்களில் நடைபெறுகின்றபோது அனைவருடைய பங்கேற்பையும் உறுதி செய்ய வேண்டும். தனி மனித வாழ்வின் உயர்விற்கு உதவி புரியும் இப்படிப்பட்ட தியானத்தில் ஒவ்வொருவரும் முழு மனதோடு கலந்து கொண்டு ஒத்துழைக்க அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஆன்மீக வாழ்வை புதுப்பித்து ஆண்டவரில் இணைந்து ஆற்றல் பெற இறைவன் தருகின்ற இந்த ஒருவார தியானத்தில் அனைவரும் குடும்பமாக இணைந்து பங்கேற்று பயன்பெற உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது மறைமாவட்ட அளவிலான “பாப்புலர் மிஷன்’’ தியானத்தின் அதிகாரபூர்வமான தொடக்கம் பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் அதே நாளில் ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயத்திலும் வைத்து ஜனவரி 24 ஞாயிறு அன்று நடைபெறுகிறது. ஆன்மீக எழுச்சியை உருவாக்கும் இந்த தியானத்தில் அனைவரும் முழுமனதுடன் பங்கேற்று இறையருளை நிறைவாக பெற அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த ஜூபிலி ஆண்டில் அனைத்து ஆலயங்களிலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரத்தை சிறப்பாக கொண்டாட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். ‘‘எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக’’ (யோவான் 17:21) என்ற கிறிஸ்துவத்தின் இறுதி விருப்பத்தை செயல்படுத்த அனைத்து கிறிஸ்தவ சபைகளும் ஒன்று கூடி முழு ஒற்றுமைக்காக செபிக்கும் வாரம் ‘‘கிறிஸ்துவ ஒன்றிப்பு செப வாரமாகும்’’. இயேசுவின் இந்த ஆவலுக்கு செவிகொடுத்து அனைத்து சபை நம்பிக்கையாளர்களும் ஒன்று சேரவும், ஆக்கப்பூர்வமான உரையாடலில் ஈடுபடவும், செப சாட்சிகளாக வாழவும் அழைக்கும் சிறப்பு நாட்கள் இவை. இவ்வாண்டு ஜனவரி 18 – 25, 2021 வரை ‘‘கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரமாகவும்’’, இவ்வாரத்தில் வரும் ஞாயிற்றுக் கிழமையை ‘‘கிறிஸ்தவ ஒன்றிப்பு ஞாயிறாகவும்’’ (ஜனவரி 24) கொண்டாடுகிறோம்.

எட்டு நாட்களுக்குரிய வசனங்களும், சிந்தனைகளும் இச்சுற்றுமடலோடு பங்குகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ சபைகள் ஒன்றிணைந்தோ, ஒவ்வொரு சபைகள் தனித்தனியாகவோ, மறைமாவட்ட அளவில், வட்டார அளவில், பங்கு அளவில் மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் துறவற சபை இல்லங்களில்

இந்த சிந்தனைகளை மையப்படுத்தி செபத்தில் ஈடுபட்டு இறைவனோடும் சகோதர கிறிஸ்தவரோடும் ஒப்புரவாகி வாழ உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தோடு தக்கலை மரியாயின் சேனை சார்பாக மரியாயின் சேனை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கான ‘மரியாயின் ஆன்மீகம்’ என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு சூசைப்புரத்தில் வைத்து ஜனவரி 30 தேதி சனிக்கிழமை அன்று காலை 9.30 முதல் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெற உள்ளது. இதில் மரியாயின் சேனை உறுப்பினர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் ஒன்றிணைந்து பங்கேற்று அன்னை மரியின் அருளை தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் நிறைவாகப் பெற்று மரியன்னை பக்தியில் வளர உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

ஆயர் இல்லம்
13.01.2021

என்றும் ஈசோ மெசியாவில்

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

இச்சுற்றுமடலை அனைவரது புரிதலுக்காக ஜனவரி 16, 2021 அன்று திருப்பலியிடையே அனைத்து ஆலயங்களிலும் வாசிக்கவும்.